| | | | |
|---|---|---|---|
| Headline | **FUND OF Malaysian AIDS Foundation (MAF)** | | |
| Date | **06 Aug 2011** | Language | **Tamil** |
| MediaTitle | **Tamil Nesan** | Page No | **2** |
| Section | **News** | Article Size | **174 $cm^2$** |
| Journalist | **N/A** | Color | **Black/white** |
| Frequency | **Daily** | ADValue | **337** |
| Circ / Read | **45,000 / 124,000** | PRValue | **1,012** |



# நிராதரவாளர்களுக்கான உதவிநிதியாக 28 லட்சம் வெள்ளி பகிர்ந்தளிப்பு

**கோலாலம்பூர், ஆக.6-**

மலேசிய எயிட்ஸ் மன்றம் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்களுக்காக மொத்தம் 28 லட்சம் வெள்ளியை மகளிர் குடும்ப சமூக மேம்பாட்டுத் துறை அமைச்சு நேற்று பகிர்ந்தளித்தது.

அஞ்சோங் டாமாய் திட்டத்தின் வழி இந்த நிதி பகிர்ந்தளிக்கப் பட்டதாக அமைச்சர் டத்தோஸ்ரீ ஷரிஸாட் அப்துல் ஜாலில் தெரிவித் தார். இதில் 20 லட்சம் வெள்ளி மலேசிய எயிட்ஸ் மன்றத்தின் கீழான 19 இல்லங்களுக்கும், எஞ்சிய 8 லட்சம் வெள்ளி எட்டு ஆதரவற்றோர் இல்லங்களுக்கும் நேற்று வழங்கப்பட்டது. சமூகத் தாலும், குடும்பத்தாலும் கைவிடப் பட்டவர்களுக்கு ஆதரவளித்து அரவணைக்கும் இல்லங்களுக்கு இந்த உதவிநிதி வழங்கப்படுவது மிகவும் அர்த்தப்பூர்வமானது என்று தாம் உணருவதாக அவர் தெரிவித்தார்.

இத்தகையோரை கவனிக்கும் பொறுப்பு அனைவரின் கடப்பாடாகும் என்பதை உணர்ந்து இந்த உதவிநிதி வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார். சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கு நேற்று காசோலைகளை எடுத்து வழங்கிய பின்னர் அமைச்சர் இவ்வாறு கூறினார். நாட்டிலுள்ள ஆதரவற்றோர் இல்லங்களின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டும் இந்த உதவி அளிக்கப்பட்டிக்கிறது. தேசிய முதன்மை உற்பத்தி துறையின் நோக்கத்தை வெற்றியுறச் செய்வதில் இந்த உதவிநிதி முக்கிய பங்கை வகித்திடு வதாகவும் அவர் விவரித்தார்.




நிராதரவாக்கப்பட்ட மகளிர், சிறார்கள் மற்றும் எச்.ஐ.வி, கைதிகள், போதைப் பித்தர்கள், விபசாரம், போன்ற காரணங்களுக்காக குடும்பத் தாலும் சமூகத்தாலும் ஒதுக்கப்பட்டுவிட்ட இளையோர் போன்றவர்களின் வாழ்க்கை நலனை கவனிக்கும் பொருட்டு இந்த ஒதுக்கீடு வழங்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எச்.ஐ.வி, எயிட்ஸ் மற்றும் பிற சமூக சீர்கேடுகளை துடைத்தொழிப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாகிறது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.